**செய்தி வெளியீடு எண்: 591** **நாள்: 30.08.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

ஸ்டார் 2.0 திட்டத்தின் வழி ஆவணதாரர்களின் அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பும் வசதி மற்றும் பதிவு மறுப்புச் சீட்டு பெற்றுக்கொள்ளும் வசதி 3.9.2018 முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது.

பதிவுத்துறையின் https://tnreginet.gov.in என்ற இணையதளம் வழி நேரடியாக ஆவணம் தயாரிக்கலாம் அல்லது தாங்களே சொந்தமாக ஆவணம் தயாரிக்கும் நிலையில் இணையதளத்தில் ஆவணச்சுருக்கத்தை உட்புகுத்தலாம். மேற்காணும் இரு நிகழ்வுகளிலும் ஆவணதாரர்களின் அலைபேசி எண்ணை உள்ளீடு செய்ய மென்பொருளில் தற்பொழுது வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆவணதாரர்கள் தங்களது சரியான அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆவணதாரரின் அலைபேசி எண்ணை உள்ளீடு செய்தவுடன் **“OTPயினை பெறுக”** என்ற பொத்தானை அழுத்த வேண்டும். அவ்வாறு செய்தவுடன் ஆவணதாரரின் அலைபேசிக்கு OTP எண் அனுப்பப்படும். அந்த OTP எண்ணை இணையதளத்தில் உள்ளீடு செய்தவுடன் பதிவுத்துறையினால் சரிபார்க்கப்பட்டு அலைபேசி எண் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆவண எழுத்தர் / வழக்கறிஞர் மூலம் ஆவணம் தயார் செய்யப்படும்போது ஆவணதாரர்கள் தங்களது அலைபேசி எண் தவறாது உள்ளீடு செய்யப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு ஆவணதாரர்கள் தங்களது அலைபேசி எண்ணை வழங்கும்பட்சத்தில் கீழ்கண்ட பயன்களை பெறலாம்.

1) ஆவணப்பதிவின் 33 வெவ்வேறு நிலைகளில் குறுஞ்செய்தி தமிழ் அல்லது ஆங்கில மொழியில் அனுப்பப்படும். முக்கியமாக பதிவுப்பணி முடிந்தவுடன் ஆவணம் திரும்ப பெற்றுச் செல்ல குறுஞ்செய்தி ஆவணதாரருக்கு அனுப்பப்படும்.
2) ஆவணம் பதிவு செய்யப்பட்டு ஆவணதாரருக்கு திரும்ப வழங்கப்பட்டவுடன் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து ஆவணத்தயாரிப்பின் போது வழங்கப்பட்ட அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தேதியில் ஆவணம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட விவரம் உறுதி செய்யப்படும்.
3) ஆவணம் நிலுவை வைக்கும் நிகழ்வுகளில் என்ன காரணத்திற்காக நிலுவை வைக்கப்படுள்ளது என்ற குறுஞ்செய்தியும், நிலுவை விடுவிக்கும் போது அதற்கான குறுஞ்செய்தியும் ஆவணதாரருக்கு அனுப்பப்படும்.
4) கட்டடத்துடன் கிரையம் செய்யப்படும் நிகழ்வுகளில் கட்டடக் களப்பணி மேற்கொண்டபின் இழப்பு உள்ளதா என்ற விவரமும் இழப்பு உள்ளது எனில் கட்ட வேண்டிய தொகை குறித்தும் குறுஞ்செய்தி அனுப்பப்படும்.
5) மதிப்புக் குறைவு உள்ள ஆவணங்களில் காரணம் கோரும் குறிப்பாணை, சந்தை மதிப்பு நிர்ணய ஆணை பிறப்பிக்கப்பட்ட விவரங்களும், செலுத்த வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை, குறைவு பதிவுக் கட்டணம் போன்ற விவரங்களும் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும்.

வேறொருவரின் அலைபேசி எண்ணை உட்புகுத்தும் நிலையில் மேற்கண்ட குறுஞ்செய்திகள் அனைத்தும் தவறான அலைபேசி எண்ணுக்கே சென்றடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பதிவு மறுப்புச் சீட்டு

ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டவுடன் அந்த ஆவணம் பதிவுச் சட்டம், பதிவு விதி, அரசாணை மற்றும் பதிவுத்துறைத் தலைவர் சுற்றறிக்கைகளுக்கு முரணாக இருக்கும்பட்சத்தில் பதிவு விதி 27-ன்படி பதிவு அலுவலர் அப்பதிவினை மறுக்கலாம். இவ்வாறு பதிவு மறுக்கப்படும் போது பதிவு அலுவலர் ஸ்டார் 2.0 மென்பொருளின் வழி பதிவு மறுப்பிற்கான உரிய காரணத்தினை தெரிவு செய்து பதிவு மறுப்புச் சீட்டு வழங்கும் புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த பதிவு மறுப்புச் சீட்டை அச்சுப்பிரதி எடுத்து பதிவு அலுவலர் கையொப்பமிட்டு ஆவணதாரர்களுக்கு வழங்குவார்.

ஆவணதாரர்கள் தங்களது பதிவு மறுக்கப்படும்போது தவறாது பதிவு அலுவலரிடம் பதிவு மறுப்புச் சீட்டை கேட்டு பெற்றுக்கொள்ளவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. பதிவு மறுப்புச்சீட்டு பெற்றவுடன் ஆவணதாரர்கள் பதிவு மறுப்புச் சீட்டில் தெரிவிக்கப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து மீள் பதிவுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். பதிவு அலுவலர் பதிவு மறுப்புச் சீட்டு வழங்காமல் வாய்மொழியாக பதிவினை மறுக்கும் நிகழ்வுகளில் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக கட்டணம் இல்லா தொலைபேசி எண் 1800 102 5174-ஐ தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**